# பெற்றோரே, வளர்ந்தவர்களே, அவதானமாக இருக்கவும்.

**உங்களது பிள்ளைகளைப். பாதுகாத்துக் கொள்ளவும் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முகமாக உங்களது பொறுப்புக்களைச் செய்யுங்கள்.**



எப்பொழுதும் உங்களது நேரத்தை உங்கள் பிள்ளைகளுடன் செலவழியுங்கள்.



உங்களது பிள்ளைகள் ஏதாவது ஆபத்தில் இருப்பார்களாயின் அல்லது துன்பத்திற்கு உள்ளாகி இருப்பார்களாயின் அதுபற்றி உங்கள் கவனத்தை செலுத்துங்கள்.



உங்களது பிள்ளை தவறானதொரு விடயத்தை செய்துவிட்டால் அது ஏன் தவறானது என்பதையும் அதன் பாதகமான விளைவு என்ன என்பதையும் தெளிவுபடுத்துங்கள்.

செவிமடுங்கள். பிள்ளைகள் எதிரபார்ப்பது அவர்கள் கூறுவதை செவிமடுத்து அதனை கரிசனையுடன் கவனத்திற் கொள்வதாகும்.





நீங்கள் உங்கள் பிள்ளையுடன் கோபமாக இருக்கும் போது கெட்ட வார்த்தைகளை பாவித்தல் அல்லது குரூரத்தனமான செயல்களை செய்யாமல் நியாயமான முறையில் பதிலளிப்பதற்கு உங்கள் மனம் அமைதியடையும் வரை காத்திருந்து பதிலளியுங்கள்.





உங்கள் பிள்ளைகள் எங்கே யாருடன் இருக்கிறார்கள் என்பதுபற்றி எப்பொழுதும் அவதானத்துடன் இருங்கள்.

உங்கள் பிள்ளை உங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையை காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

எந்த சந்தர்ப்பங்களையும் எதிர்கொள்ளக் கூடியவாறு உணர்வுபூர்வமாக அவர்களைப் பலப்படுத்துங்கள்.





எவ்வாறு உங்களுடைய பிள்ளைகள் சிந்திக்கின்றார்கள் என்பதை புரிந்து கொள்ளுங்கள். (அது அவர்களுடைய நடத்தை மாற்றங்களை புரிந்து கொள்ள உதவும்) ஒத்துணர்வு ஆகுங்கள்.



உங்களுடைய கண்காணிப்புடன் உங்களுடைய பிள்ளைகளுக்கு தெரிவு செய்யும் மற்றும் முடிவெடுக்கும் சந்தர்ப்பத்தை கொடுங்கள். அவர்களுடைய நடத்தை, மாற்றம் ஆகியவற்றிலும் அவதானம் செலுத்துங்கள்.

සෘ ලංකා ළමා දුරකථන සේවය
இலங்கை சிறுவர் தொலைபேசி சேவை
ChildLine Sri Lanka
1929

சமூகத்தில் உள்ள ஆபத்துகளில் இருந்து எவ்வாறு தவிர்ந்து கொள்ளுவது பற்றி சிறு வயதிலிருந்து உங்களது பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுங்கள்.



நீங்கள் இருக்கும் இடத்தில் சிறார்களின் பாதுகாப்பு சம்பந்தமாக சந்தேகத்திற்கு இடமான அல்லது பிரச்சினைக்குரிய நபர்கள் செயற்படுவதை உலாவுவதைக் கண்டால் உடனடியாக கீழ்கண்ட இடங்களுக்கு அறிவித்தல் கொடுக்கவும்.

அருகில் இருக்கும் பொலிஸ் அல்லது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 1929 சிறுவர் உடனடி உதவித் தொலைபேசிக்கு


NATIONAL CHILD PROTECTION AUTHORITY SRI LANKA

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை**

இல. 330, தலவதுகொட வீதி, மாதிவெல. ஸ்ரீ ஜயவர்தனபுர.

தொலைபேசி: 011 2778912-14 | தொலைநகல் : 011 2778915 | இணையத்தளம்: www.childprotection.gov.lk | மின்னஞ்சல்: ncpa@childprotection.gov.lk